Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

ஸ்தாபிதம் (1889)

ஆவணி 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளிவருவது

தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சுஅ] யாழ்ப்பாணம்:- ஏவிளம்பி ஹு புரட்டாதிமீ ௧௧ உ வெள்ளிக்கிழமை (27 SEPT. 1957) [இல-உரு]

### ஸ்ரீமதி இராஜாத்தினுவின் நம்பிக்கை• இல்லாப் பிரேரணை

—o—

அரசாங்கத்தின்மீது நம்பிக்கை இல்லை என்னும் பிரேரணை ஒன்றைப் பிரேரிப்பதாக ஸ்ரீமதி கே. எம். பி. இராஜரத்தின முன் அறிவித்தல் கொடுத்திருக்கின்ருர். நம்பிக்கை இல்லாமைக்குக் காரணம் பண்டாரநாயக செல்வநாயகம் ஒப்பந்தத்தாற் சிங்கள மக்களுக்குத் தீமை உண்டாகுமென்பதாகும்.

### கொழும்புத் தமிழ்ச் சங்கம் மறைமலையடிகள் நினைவு

—o—

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நூல்நிலையத் திறப்பு விழாவுடன் மறைமலையடிகளார் நினைவும் வெள்ளவத்தையில் கொண்டாடப்பட்டது. பண்டிதர். திரு. கா. பொ. இரத்தினம், சேர். கந்தையா வைத்தியநாதன், ஸ்ரீ எஸ். எம். கமால்தீன் ஆகியோர் நூல்நிலையம்பற்றியும் மறைமலையடிகளாரின் கருத்துக்கள் பற்றியும் விளக்கிப் பேசினுர்கள்.

### வித்தியா பகுதிக்கு அமெரிக்க உதவி

இலங்கை வித்தியா பகுதிக்கு ரூபா 100,000 பெறுமதியான புத்தகங்கள், முதலியவற்றை அமெரிக்க அரசாங்கம் நன்கொடையாகக் கொடுத்துள்ளது.

### ஐ. நா. சபையில் சீனுவுக்கு இடமில்லை

ஐக்கிய நாட்டுச் சபையில் சீனுவுக்கு இடங்கொடுக்கப்படவேண்டு மென்று இந்தியா பிரேரித்த பிரேரணை தோல்வியுற்றது.

### இராமநாதன் கல்லூரிப் பழைய மாணவிகள் கூட்டம்

இராமநாதன் கல்லூரிப் பழைய மாணவிகள் கூட்டமொன்று வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில் கல்லூரித் தலைமை ஆசிரியை ஸ்ரீமதி ரி. முத்துக்குமாரு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. கே. ஆழ்வாப்பிள்ளை, சேர் கந்தையா வைத்தியநாதன், செல்வி என். காசிப்பிள்ளை செல்வி சி. சின்னத்தம்பி முதலியோர் சொற்பொழிவாற்றினுர்கள். இராமநாதன் கல்லூரியா லுண்டாகும் நன்மைகளுடன் சைவ மங்கையர் கழகத்தா லுண்டாகும் நன்மைகளும் அச்சொற்பொழிவுகளிற் குறிப்பிடப்பட்டன.

### அணுக் கதிர்ச் சுரம்

இன்று உலகிற் பரவி வரும் சுரத்துக்குக் காரணம் அணுக் குண்டுப்பரீட்சையே என்ற விஞ்ஞானிகளின் கருத்தைத் தாம் ஆதரிப்பதாகச் சர்வதேச உணவு மகாநாடொன்றிற் பேசும்போது சர்மானிய வைத்தியகலாநிதி ஸ்மிட்ஸ் கூறியிருக்கின்ருர்.

### யாழ்ப்பாண நகரசபைக் கணக்கிற் பிழையாம்

யாழ்ப்பாணம் நகரசபையின் 1957 ம் ஆண்டு சந்தை கடை வாடகைக் கணக்கில் பல பிழைகள் காண வந்திருக்கின்றனவாம். ஏறக்குறைய நாலாயிரம் ரூபா அளவுப் பணத் தொகை அப் பிழைகளுடன் பிணைக்கப்பட்டுமறைந்திருந்ததாகக் கூறப்படுகின்றது. எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருப்பதாகவும், வாங்க வேண்டிய பணம் வாங்கப்படாதிருப்பதாகவும் இத் தொடர்பிற் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நலன்களெல்லாந் தரும் நவராத்திரி

## உரியமுறையில் அனுட்டித்து இம்மை மறுமை இன்பம் பெறுக

ஆண்டுதோறும் புரட்டாதி மாதத்துப் பூர்வ பக்கத்துப் பிரதமை முதல் நவராத்திரி விரதம் அனுட்டிக்கப்படுவதாகும். இவ்விரதம் இவ்வாண்டு புரட்டாதி 8-ந் திகதி செவ்வாய்க்கிழமை (24-9-57) ஆரம்பமாகின்றது. விஜயதசமி நாளாகிய புரட்டாதி 17-ந் திகதி வியாழக்கிழமை (3-10-57) மானம்பு நிகழும். இவ்விரதத் தொடர்பில் இப்பொழுது ஒரு சிறிது சிந்தித்தல் நலன் தருவதொன்ருகும்.



அவன், அவள், அது என்று சுட்டி அறியப்படும் சடப்பொருள் அறிவில் பொருள்) சித்துப் பொருள் (அறிவுடைப் பொருள்) ஆகிய எல்லாவற்றையும் முழுமுதற் கடவுளாகிய பரமசிவன் படைத்து, காத்து, அழித்து, மறைத்து அருள் செய்கின்ருர். அங்ஙனம் அவர்செய்யும்பொழுது சிவம், சக்தி என்னும் வேறுபட்ட சொற்களாற் குறிக்கப்படுவர். சக்தி என்பது சிவத்தின் அருள் ஆற்றலைக் குறிப்பதாகும். இச்சக்தியே உலக மாதாவாயும் வீடு பேற்றைக்கொடுக்கும் பராசக்தியாயும் அமைகின்றது. தொழில் வேறுபாட்டால் உலக மாதாவாகிய உமையம்மையார் பல்வேறு திருநாமங்களாற் குறிக்கப்படுவர்.

அம்மையாரின் அருளை வேண்டி அனுட்டிக்கப்பெறும் விரதங்களுள் 'நவராத்திரி விரதம்' விசேடமானதாகும். நவராத்திரி என்பது ஒன்பது இரவு. இவ்வொன்பது இரவுகளிலும் மகாகாளி அல்லது துர்க்கையாகவும், மகா இலக்குமியாகவும், மகாசரஸ்வதியாகவும் உமையம்மையார் வழிபடப்பெறுவர். முதல் மூன்று இரவுகளிலும் மகா காளிக்கு அல்லது துர்க்கைக்கு விசேடமாகவும் நான்கு, ஐந்து, ஆரும் இரவுகளில் மகா இலக்குமிக்கு விசேடமாகவும் இறுதி மூன்று இரவுகளில் மகாசரஸ்வதிக்கு விசேடமாகவும் பூசை செய்யப்பெறும். பத்தாம் நாளாகிய விஜயதசமியில் மானம்பு நடைபெற்று வெற்றிக்குறி காணவரும்.

மகாகாளி அல்லது துர்க்கை வழிபாட்டால் உயிர்களின் முன்னேற்றத்துக்குத் தடையாயுள்ள எல்லாம் அழிக்கப்படும். மகா இலக்குமி வழிபாட்டால் தனம், தானியம் முதலிய அட்ட ஐசுவரியங்களும் பெறலாகும். மகாசரஸ்வதி வழிபாட்டால் கல்வியும் ஆன்ம ஞானமும் சித்திக்கும். நவராத்திரி விரதப் பயன் இவையென அருளுரைகள் அறியத் தருகின்றன.

பத்தாம் நாளாகிய விஜயதசமி மகிடாசுரனைக் கொன்று வெற்றி பெறும்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

# சிவஞானபோதம் ஓர் தேன் வதை

## சிவத்தின் அருளாகிய தேனை நீங்கள் பருகுதல் வேண்டும்

### சைவப் பெரியார் திரு, சி. நாகையா அவர்களின் உள்ளக் கிடக்கை

[ ஆசிரியர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள் ]

"நெருநல் உளனொருவ னின் றில்லை யென்னும் பெருமையுடைத்திவ் வுலகு"

என்ற வள்ளுவப் பெருந்தகையாரின் வாக்கியத்தை சிற்றறிவுடைய நாங்கள் தினமும் கண்டு வாழுகின்ருேம். நமது ஈழ நாட்டில் சைவசமயத்துக்கும் தமிழ்மொழிக்கும் அருந்தொண்டு புரிந்தும் அவற்றைக் கண்ணை இமை காப்பதுபோலக் காத்து வந்தவருமாகிய சைவப் பெரியார் திரு சி. நாகையா அவர்கள் 21-9-57 சனிக்கிழமை இரவு 8-30 மணியளவில் வண்ணார்பண்ணையிலுள்ள தமது இல்லத்தில் தம்மைச் சிலகாலம் பீடித்த நோயின் காரணமாகச் சிவபதமடைந்தனர். திரு. சி நாகையா அவர்கள் உடுவிலைச் சேர்ந்த திரு. சிதம்பரப்பிள்ளையவர்களுக்கும் ஸ்ரீமதி வள்ளியம்மையாருக்கும் புத்திரராகப் பிறந்தவர். இவருடைய பெற்ருர்கள் ஈசுர பக்தி, சைவாசாரம், ஒழுக்கம், இரக்கம் முதலிய நற் குணங்களும் பழக்கவழக்கங்களுங் கொண்டொழுகியவர்கள். திரு. நாகையா அவர்களுக்கு ஒரு ஆண் சகோதரரும் நான்கு பெண் சகோதரங்களும் உண்டு. இவர் 1895ம் ஆண்டு (அக்டோபர்) ஐப்பசி 1 ம் தேதி பிறந்தவர். ஆரம்பத்தில் உடுவில் சைவ வித்தியாசாலையில் கல்வி பயின்று பின்னர் மான்ஸ் ஆங்கில கலாசாலையிலும், வட்டுக்கோட்டைக் கல்லூரியிலும் உயர் தரக் கல்வி பயின்றனர். வட்டுக்கோட்டைக் கல்லூரியில் கல்வி பயிலுங் காலத்தில் படிப்பின் திறமையைக் கவனித்து ஷ கல்லூரியதிகாரிகள் அவருக்கு ருெக்லூட் சன்மானக் கல்வி நிதியை வழங்கினர்.

இவர் முதலில் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி மதுவிலக்குப் பகுதியில் பரிசோதகராகச் சேர்ந்தனர். அக் கடமை தமது வாழ்க்கை முறைக்கும் நோக்கத்துக்கும் மாருகும் விருப்பதை யறிந்து அதனைவிட்டு நீங்கினர். அதன் பின் இளவாலை ஸென் ஹென்றீஸ் கல்லூரியிலும் மான்ஸ் வித்தியாசாலையிலும் ஆசிரியராகக் கடமையாற்றி 1921 22ம் ஆண்டுகளில் கொழும்பு அரசினர் ஆசிரியர் பற்சிக் கழகத்தில் கல்வி பயின்றனர். இப்பொழுது கல்வி மந்திரியாகக் கடமையாற்றுகின்ற ஸ்ரீமான் W தஹநாயக்க அவர்கள் இவருடன் ஷ கழகத்தில் கல்வி பயின்றவர். இவர் கொழும்பில் மாணவனுக விருந்த காலத்தில் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றிக் கீர்த்தியடைந்தவர். உயரப் பாய்தல், குண்டெறிதல், நீளப்பாய்தல், தண்டெறிதல் முதலிய போட்டிகள் ஒவ்வொன்றிலும் இலங்கை முழுவதிலும் முதல் தானம் பெற்றவர். இவர் தம்முடைய ஆசிரியப் பயிற்சி பூர்த்தியடைந்த பின்பு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்தனர். அங்கு உயர்தரக் கல்வி பயில வேண்டுமென்ற நல்ல நோக்கத்துடன் இலண்டன் பல்கலைக் கழகப் பரீட்சைக

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அறிவித்தல்

நிகழும் புரட்டாதி மீ 17-ந் திகதி வியாழக்கிழமை (3-10-57) சைவப்பிரகாச யந்திரசாலையும் இந்துசாதனக் காரியாலயமும் விஜய தசமி விழாவின் பொருட்டு மூடப்பட்டிருக்கும் என்பதை அன்பர்களுக்கு அறியத் தருகின்றேம்.

அதிபர்

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம்அர னுமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

ஏவிளம்பி ஞூ புரட்டாதி மீ ககவ வெள்ளிக்கிழமை


## அன்னை அருள் வேண்டல்

—0—

அழுதால் உனைப் பெறலாமே என்று ஞானிகள் இறைவனை நோக்கி அருள் வேண்டி நிற்பர். மெய்யறிவுள்ளவர்கள் உண்மையாம் இன்பத்தையே பெறுவதற்கு முயல்வர்.

குதலை மொழிப் பருவக் குழந்தைகளும் சிற்றில் புனைந்தும் சிறுதே ருருட்டியும் விளையாட்டு விரும்பும் சிறுவர்களும் பெற்றேர்களிடத்து எதையும் பெற்றுவிடலாம் என்று விம்மியழுவது வழக்கம்.

நற்பயன் பெற்றுய்ய அழுதல் கற்றறிந்தோர் சால்பாகும்.

உலக அன்னையை ஒன்பது நாட்களாக உள்ளும் புறம்பும் புனிதமாயமர்ந்து விரதமிருந்து 'ஆற்றல் அருள்வாய்' என்று போற்றி வேண்டும் விழாக்காலம் இப்பொழுது நிகழ்கின்றது. 'ஆற்றல்' வேண்டுகின்றவர்களில் இராவணன், இரணியன், சூரன், துரியோதனன் போன்றவர்கள் விரும்பிப்பெற்ற ஆற்றலை நோக்குகின்றவர்கள் பலர். இன்னேரின் இறுமாப்பினலேயே இவ்வுலகில் இடுக்கண் பரந்து வருகின்றதென்ற உண்மையை உணர்த்துவதற்குச் சைவச் சங்கங்களும் அறிஞர்களும் உழைத்தல் வேண்டும்.

'கற்றது கைம் மண்ணளவு கல்லாத துலகளவென்றுற்ற கலைமடந்தை ஓதுகின்ருள்' என்ற முறையிலே அடங்கி உண்மை நெறி ஒழுக்கத்தைக் கடைப் பிடித்து இறைவனை மறவா எண்ணம் தரும் ஆற்றலைப் பெறுவதற்கு முயன்ருல் அன்னையின் அருள் கிடைக்கும். மேன்மைகொள் சைவநீதி உலகெங்கும் விளங்கும். மாரி வளம் பெருகும். கோன்முறை அரசு நடக்கும். உழுதுண்டு குறைவில்லாது நல்ல வண்ணம் உலகம் வாழும்.

அரசியல் அலை

# ஆற்ருதவர்களின் ஐப்பசிச் சத்தியாக்கிரகம்

## கண்டி நோக்கிக் காலாலே தவஞ் செய்வார்களாம்!!

## நொண்டிக் கட்சியின் நூதன நடைப்போர்

ஆவணி ஆயத்தம் முடிந்தவுடன் புரட்டாசிப் புரட்சியைத் திருமதி இராசரத்தின சிங்களச் சிறீ பொறித்த மோட்டார் வண்டி ஓட்டி ஆரம்பித்து வைத்த பின் இப்பொழுது ஐப்பசிக்கும் திட்டம் போடப் பெற்றிருக்கின்றது.

தலையாலே தவங்கிடக்கின்ருர் என்று முடியாத காரியத்தை முயல்கின்றவர்களைப்பற்றி விகடமாகப் பேசுவது வழக்கம் ஆதிக்கம் இழந்த ஐக்கிய தேசிபக்கட்சி இன்னும் உயிருடன் இருப்பதை எடுத்துக் காட்டுவதற்காக கண்டிமாநகரப் புத்த விகாரையை நோக்கி நோன்பிருந்து நொண்டி நடை நடந்து காலாலே கடுந்தவஞ் செய்யத் துணிந்துவிட்டதாம்.

அரசாங்கச் செலவில் அரசாங்கப் பத்திரிகையில் அந்த ஒப்பந்தத்தைப்பற்றி திரு ஜி. ஜி. பொன்னம்பலத்தின கருத்தை வெளியிட்டதுமன்றி அவ்வாறு செய்தமை முற்றிலும் வரவேற்கப்படத்தக்கதென்று பாராளுமன்றத்திலே பிரதமர் திரு. எட்மன் சமரக்கொடியின் கேள்விக்குப் பதிலளிக்குமுகமாக எடுத்துக் காட்டியபொழுது திரு. பொன்னம்பலத்தின் கருத்து அந்த ஒப்பந்தத்தைப் பற்றிய உ ளக் கிடக்கையை நன்கு புலப்படுத்துகிறதென்று அழுத்தந் திருத்தமாகக் கூறியிருக்கவும் ஐக்கியதேசியக் கட்சியினர் சிங்கள மக்களைத் தட்டியெழுப்புவதற்கு அந்த ஒப்பந்தத்தை உதாரணமாகச் சுட்டிக்காட்டுவது பெருவியப்பாகின்றது.

ஒப்பந்தம் இன்னும் உருவாயிருக்கின்றதாஎன்பதே அறிந்தவர்களின் கேள்வி. இந்த நிலையிலே கண்டிக்குக் கால்நடைக் கண்டனக் கூட்டத்தை திரு ஜே. ஆர். ஜயவர்த்தன அழைத்துச் செல்வது வேகின்ற வீட்டிலே கொள்ளையடிப்பது போலிருக்கின்றது.

## கீரிமலைக் கேணிக்குத் திருத்தம்

கீரிமலைக் கேணியானது இலங்கையிலுள்ள யாவருக்கும் பெரும் நன்மை பயப்பதொன்ருகும். யாத்திரையோடு தேக சுகத்துக்காக அங்கு நீராடச் செல்வோர் பெருந் தொகையினர். இத்தன்மையதாயிருத்தலின் இக்கேணிக்குப் பல திருத்தங்கள் செய்யவேண்டும் என்று தெல்லிப்பழைக் கிராமச் சங்கத் தலைவர் திரு வி. கதிரையாண்டி அவர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு உபசாரக் கூட்டமொன்றில் கீரிமலை நகுலேஸ்வர வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் திரு வி. கந்தையா பேசும் பேசுப்போது குறிப்பிட்டார். திருவாளர்கள் கே. சுந்தரமூர்த்தி, ஆர். என். சிவப்பிரகாசம், அரசாங்க மேற்சபை அங்கத்தவர் திரு பி. நாகலிங்கம் ஆகியோர் பேசும்போது குறித்த கேணிக்கு மின்சார வசதி அவசியம் தேவை என்பதை வலியுறுத்தினர்.

# யாழ். அரசினர் வைத்தியசாலைநிலைமை

——0——

யாழ்ப்பாணநகர சபைத் தலைவர் திரு. எஸ். எஸ். நவரத்தினம் தலைமையிலே கூடிய நகரசபைக் கூட்டத்தில் முதலியார் செ. முத்துத்தம்பி அவர்களாலே கொண்டுவரப்பட்டு நிறைவேறிய தீர்மானங்கள்:

1 யாழ்ப்பாண அரசினர் வைத்தியசாலையில் இடநெருககடியைத் தவிர்க்க சுகாதாரப் பகுதியார் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென இச்சபை கோருகிறது.

2 யாழ்ப்பாண மக்களின் அளவிட முடியாத கஷ்ட நஷ்டங்களை நிவர்த்தி செய்யும் நோக்கத்துடனுவது இங்கு உடனடியாக ஒரு விசா கந்தோர் கிளைக் காரியாலயம், செலவாணி கட்டுப்பாடுப் பகுதி கிளைக்காரியாலயம் ஆகியவைகளைத் திறக்க மத்திய அரசாங்கம் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும்.

3 நகர மின்சார விநியோகம் திருப்தியற்ற வகையில் நடைபெற்று வருவதனல் இந்தக் குறையை நீக்க உடனடி நடவடிக்கை அவசியம்.

4 யாழ்ப்பாணத்தில் விநியோகிக்கப்படும் உப்பு தரம் குறைந்திருப்பதனல் இதன் தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் எடுக்கவேண்டும்

"மருந்து வகைகள் கையிருப்பில் இல்லையென்பதற்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலையிற் சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்கள் திருப்பி அனுப்பப்படாதவாறு நடவடிக்கைகளை சுகாதார அதிகாரி எடுக்க வேண்டுமென இச்சபை கோருகிறது" என்ற தீர்மானம் திரு எ. துரைராசசிங்கத்தினல் பிரேரிக்கப்பட்டு திரு செ. முத்துத்தம்பியினல் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

# உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 29—9—57 —— 5—10—57. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

குடும்ப நிலைமைகள் இந்த வாரந் தொடக்கம் திருந்தும். உம்முடன் போட்டியிடுவோரை நீர் வெல்லக்கூடியதாயிருக்கும். முதல்நாள் உம்மைச் சிறிது நிலைகுலைக்கும், ஆனல் பெரும் அபாயங்கள் ஒன்றும் உண்டாகமாட்டா.

**இடபராசி** கார்த்திகை 2, 3 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

முன் அரைவாரம் சிறிதும் நல்லாயிருக்கமாட்டாது. உம்முடைய கருமங்கள் பலவற்றில் நீர் அதிக எதிர்ப்பை முன்னிட வேண்டிவரும். வாரமிகுதி நல்லாயிருக்கும். ஆனல் குடும்பச் சமாதானம் இருக்கமாட்டாது.

**மிதுனராசி** மிருகசிரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.

முன் அரைவாரம் புதுக் கருமங்களுக்கு நல்லாயிருக்கும் உத்தியோக சித்தியும் புகழும் நிச்சயம். பின் அரைவாரம் சிறிதும் நல்லாயிருக்கமாட்டாது. புதன், வியாழம், வெள்ளி தொந்தரவாயிருக்கும். வாரஇறுதி திரும்பவும் நன்ருகும், ஆனல் குடும்பக் கருமங்கள் பற்றி எச்சரிக்கையாயிருக்கவும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

ஓரு அளவுக்கு நல்லவாரம். [illegible] முயன்று உழைக்கவேண்டும், பெறுபேறு அதிகம் நல்லாயிருக்க மாட்டாது இரகசியப் பகைவரைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும். வெள்ளி பிற்பகலும் சனியும் கவனமாய்க் கழிக்க வேண்டும்.

**சிங்கராசி** மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்.

ஒரு நல்லவாரம். கருமங்கள் ஒழுங்கு பண்ணுவது இலகுவாயிருக்கும் எதிரிகளுக்கு அழிவும் புகழும் நிச்சயம். பணத் துறையில் ஒரு மிக நல்லவாரம்.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

ஒரு நல்ல வாரம். உம்முடைய சொந்தத் துன்பங்கள் சில நீங்க வேண்டும். ஆனல் தேகசுகம் இன்னமும் நல்லாய்த் திருந்தவில்லை. தனலாபமும் புகழும் நிச்சயம்.

**துலாம்**, சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

செலவதிகரிக்கும். நீர் கடன்காரனுக வேண்டிவரும். கண் நோய்கள் பற்றிக் கவனமாயிருக்கவும், இரகசியப் பகைவர் மூலமும் இழிமொழி பரப்புவோர் மூலமும் தொந்தரவுகளுக்கு இடமில்லாமலில்லை.

**விருட்சிகராசி** விசாகம் 4.ம் பாதம் அநுஷம், கேட்டை.

ஒருநல்ல வாரம், சில சொந்தக் கருமங்களில் இந்த வாரம் நீர் சமாதானமான ஒழுங்கு செய்யக் கூடியதாயிருக்கும், சமூக சித்தியும் எதிர் பாராத இலாபமும் நிச்சயம்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்,

ஒருநல்ல வாரம். உம்முடைய கடமையில் மேலதிகமான சில பொறுப்புக்களை நீர்ஏற்கவேண்டிவரும். புகழும் வழக்கில் வெற்றியும் நிச்சயம்.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

உம்முடைய பிதாவழி இனத்தவர்கள்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும். விசேட கருமங்களில் நீர் தீர்மானஞ் செய்வதில் வருத்தப்படுவீர் பணத் துறையில் நல்லவாரம். காத்திராத இலாபங்கள் நிச்சயம்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

ஒரு தளப்பமான வாரம். தேகசுகம் அதிகம் நல்லாயிருக்கமாட்டாது. சிறு அபாயங்களுக்கு அறிகுறிகளிருக்கின்றன. இழிமொழி பரப்புவோரைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும் பணத்துறையில் ஒரு அளவுக்கு நல்லவாரம்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

குடும்பக் கருமங்கள் தொந்தரவாயிருக்கும். பிழை எண்ணங்களுக்கும் சண்டைகளுக்கும் இடமுண்டு. சில துர்நிமித்தங்களை நீர் நீக்கக்கூடியதாயிருக்கும். பணத்துறையில் ஒரு நல்லவாரம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இலங்கை இந்தியர் நிலைமையில் மற்ருெரு நெருக்கடி

இலங்கையில் வசிக்கும் இலங்கை - இந்தியர்களுள் இந்திய பிரசா உரிமையைப் பெருமலும் இலங்கைப் பிரசா உரிமையைப் பெற முடியாதும் இருப்பவர்கள் நாடற்றவர்கள் என்ற சொல்லாற் குறிக்கப்பட்டு வருகின்றனர். இலங்கைப் பிரசா உரிமையைப் பெருதோர் இந்தியர் எனப்படுவர் என்பது இலங்கை அரசாங்கக் கருத்தாயிருந்து வந்தது. இந்திய பிரசா உரிமையைப் பெருதோரின் கருமம் இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்ததே அன்றி இந்திய அரசாங்கத்தைப் பொறுத்ததல்ல என்னும் கருத்தை இந்திய முதல் மந்திரி பண்டித நேரு அவர்கள் வெளியிட்டு வந்திருக்கின்ருர். இதுபற்றி இலங்கை அரசாங்கம் என்ன செய்யப்போகின்றதென்று கல்குடாப் பிரதிநிதி ஸ்ரீ மாக்கான் மரைக்காயர் முதல் மந்திரி ஸ்ரீபண்டாரநாயக்கவைக் கேட்டார். இந்திய அரசாங்கத்தின் அபிப்பிராயத்தை இலங்கை அரசாங்கம் எப்பொழுதாயினும் ஏற்றுக்கொண்டதில்லை என்று திரு. பண்டாரநாயக மறுமொழி கூறியிருக்கின்ருர்.

## பிரிவை உண்டாக்குமாம் தமிழ்ப்பல்கலைக் கழகம்

தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைப்பதுபற்றித் தீர்மானஞ் செய்ய முடியவில்லை என்றும் பல்கலைக் கழகக் கல்வி விசாரணைச் சபை அறிக்கையை ஆராய்ந்த பின்பே தீர்மானஞ் செய்யலாமென்றும் தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கக் குழுவினரின் கேள்விக்கு மறுமொழி சொன்ஞராமல்லவா முதல் மந்திரி திரு. பண்டாரநாயக அவர் அங்களவில் நின்றுவிடவில்லையாம். தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைத்தால் நாட்டு மக்களிடையே பிரிவு மனப்பான்மை உண்டாய்விடுமென்று தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைப்பதற்கு எதிர் நியாயமும் கூறினுராம்.

# அம்மைவழிபாட்டுக்கு அரியகாலம்

## ஏற்ற தவம் செய்தால் எல்லா நலன்களும் எய்துதல் ஆகும்

[ ஸ்ரீ சுவாமி சிவானந்தா அவர்களது கட்டுரை ஒன்றின் சாரம் ]

மக்கட் பண்பாடு ஆரம்பமான காலத்தில் அம்மை வழிபாடும் ஆரம்பமாகி அம்மைக்கே முதலிடங்கொடுக்கப்பட்டது. பண்பாடு வளர்ந்து வருதலும் அம்மைக்கு முதலிடங் கொடுக்கும் வழக்கம் மாறி அப்பனுக்கே முதலிடம் கொடுக்கப்படுவதாயிற்று. அப்படியே இறைவனைப் பற்றிய எண்ணமும் மாறுதலடைந்தது. ஆயினும் அம்மை வழிபாடும் தொடர்ந்து நடைபெற்று வந்தது. பிள்ளைக்குத் தாயே நெருங்கிய தொடர்புடையவளாயிருத்தலின் இறைவனைத் தாயாக மதித்து வழிபடும் வழக்கமும் தொடர்ந்து நிலைபெறலாயிற்று. பிந்திய காலத்தில் தாய் தந்தையராக ஒருமித்து வழிபடும் வழக்கம் ஏற்பட்டது.

கடவுள் மக்களின் காட்சிக்குட்பட்டவரல்லர். ஆயினும் வெறும் வெளியாக வழிபடுவதிலும் தாயாகவோ தந்தையாகவோ நினைத்து வழிபடுவதனுல் இறைவனுடன் தொடர்பை இலகுவாக மக்கள் உண்டாக்கிக் கொள்ளலாம்.

தாயானவள் பிள்ளையுடன் மிகுந்த அன்பாயிருக்கிருள். பிள்ளையானது தாயையே மிகவும் அணைந்துநடக்கின்றது. ஆகையினுலே அம்மை வழிபாட்டால் ஆன்ம ஞானத்தை இலகுவாயடையலாம். கேனேஉபநிடதம் இக்கொள்கையை ஆதரிக்கின்றது. ஆகவே உள்ளத் தாய்மையுடன் பிள்ளைகளைப்போல் அணைந்து அம்மையை வழிபடுங்கள்.

அப்படி வழிபட்டுச் சிறந்த சாதனை செய்தற்கு நவராத்திரி காலம் மிகப் பொருத்தமானதாகும். இந்த ஒன்பது நாட்களும் அம்மையின் பெரும் புனித நாட்களாகும். அம்மையின் எல்லா மூர்த்தங்களையும் வழிபடுங்கள். அம்மையே அகில உலகின் சக்தியாயிருக்கின்ருள். ஐந்து பூதங்களும் அவற்றின் காரியங்களும் அம்மையின் புறவடிவங்களாகும். விவேகம் பகுத்தறிவு ஆதியவை எல்லாம் அவளுடைய அகவடிவமாகும். மக்கட் சமூகமே அவளுடைய வெளிப்படையான தோற்றமாயுள்ளது. மக்களுக்குச் செய்யும் சேவை அம்மைக்குச் செய்வதாயமைகின்றது.

அம்மையே உங்கள் கண்கள் மூலமாய்ப் பார்க்கின்ருள். காதுகள் மூலமாய்க் கேட்கின்ருள்! கைகள்மூலமாய்ச் செய்கின்ருள் என்பதை உணருங்கள்.

தேவியே எவற்றையும் படைத்துக் காத்து அளிக்கும் அருட் சக்தியாயிருக்கின்ருள். ஆகையினுலே தேவி வழிபாடு எந்த ஒரு பகுதியினருக்கு மாத்திரம் உரியதாயில்லாது யாவருக்கும் பொதுவானதாயிருக்கின்றது. அப்படியிருக்கவும் தேவியானவள் அச்சந் தரும் ஓர் இந்துமதப் பெண் தெய்வமாகக் கருதப்படுவது வருந்தவேண்டிய தொன்ருகும்.

உலகிலுள்ள யாவரும் சக்தி வழிபாடு செய்வோராயேயிருக்கின்றனர். எந்த விதமாகவோ சக்தியை விரும்பாதவர் யார் உளர். உளவாகிய எல்லாம் ஈறில்லாத நிலையான சக்தியே என்று விஞ்ஞானிகள் சொல்லுகின்றனர்.

சக்தியின் உண்மையான உருவத்தைக் கண்டு வழிபடுதல் மக்களுக்கு முடியாதாகையால் சக்தியின் தொழில்களைக் காண்பிக்கும் காளியாகவும், இலக்குமியாகவும், சரஸ்வதியாக

தொடர்ச்சி 4-ம் பக்கம்

# இல்லங்களிற் கன்னி வழிபாடு

## எல்லாக் குறைகளும் நீங்கி இன்புற ஒப்பற்ற தருணம்

புரட்டாதி மாதத்தைக் கன்னி மாதம் என்று கூறுவர் இந்த மாதத்தில் அகிலாண்ட கோடியீன்றும் கன்னியாகவே உள்ள அம்பிகையை வழிபட்டு அருள் பெறும் காலம் ஒன்றுள்ளது. அமாவாசையின் மறுநாளாகிய வளர்பிறைப் பிரதமை தொடக்கம் நவமியீருகிய ஒன்பது நாட்களும் நவராத்திரி என்று கூறப்படும். இந்த ஒன்பது நாட்களுக்கும் பராசக்தி பல்வேறு வடிவத்துடன் அருள் புரிவர் எனக் கூறப்படுகின்றது.

அம்பிகை என்னும் அன்னையின் வடிவம் அருளின் வடிவமாகும். சிவபெருமான் தன் அருளுக்கே ஒரு பெண் வடிவம் கொடுத்து தம் இடப்பாகத்தில் வைத்துக்கொண்டார். அருள் இன்றேல் உலகமில்லை. சத்தியின்றேல் தொழிலில்லை. காஞ்சிபுரத்தில் உள்ள காமக்கோட்டம் என்னும் ஆலயத்தின் கண்ணே சைவ நூலிற் சொல்லப்பட்ட 32 தர்மங்களையும் தாயாகித் தயாபரித்தார். நவராத்திரிதினங்களாகிய ஒன்பது நாட்களிலும் முதல் மூன்று நாளும் துர்க்கை வழிபாடாகவும் நடு மூன்று நாளும் இலக்குமி வழிபாடாகவும் இறுதி மூன்று நாளும் சரஸ்வதி வழிபாடாகவும் கொள்ள வேண்டும். கல்விக்கு அதிபதி புதன். புதனுக்கு ஆட்சி மூலத்திரி கோணராசியாகிய கன்னியில் சூரியன் சஞ்சரிக்கும் காலம் அம்பிகையின் அருளைப் பெறுதற்கு சிறந்த காலம் என நூல்கள் எடுத்துப் பேசுகின்றன. சிவபெருமானே படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழிலையும் செய்கின்ருர். தாம் செய்யும் தொழிலுக்கேற்ப பிரமா, விஷ்ணு, உருத்திரன் எனப் பல நாமங்களைத் தரிக்கிருர்.

ஸ்ரீ வ. குகசர்மா

அவ்வாறேஉமையம்மையாரும் சிவபெருமானிடம் இருக்கும்போது பச்சைப் பசுங்கொடியாகவும் விஷ்ணுவில் சத்தியாக விளங்கும்போது இலக்குமியாகவும் பிரமதேவரின் சத்தியாக விளங்கும்போது சரஸ்வதியாகவும் தோற்றுகிருர். இதையே

“மாது சர்வேஸ்வரி
வஞ்சிகாளி பிடாரி
விபஞ்சிவாணி வராகி
மடந்தை — அபிராமி”

என அருணகிரிநாதரும் கூறியுள்ளார். அவர் வரமருளுந்தன்மையும் எடுக்கும் உருவத்திற்குத் தக்கதாக வேறுபடும். சிங்க வாகனத்தையுடைய துர்க்கையாக விருந்து வீரத்தை யருளுவார். செந்தாமரை மலரில் இலக்குமியாக வீற்றிருந்து செல்வத்தையருளுவார். வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப்பணி பூண்டு வெண்டாமரை மலரில் வீற்றிருந்து கையில் உருத்திராக்கமும் வீணையுந் தரித்து சரஸ்வதிதேவியாக கல்வி வித்தை முதலியவற்றை அருள் செய்வார். அபிராமிப்பட்டர் என்னும் அம்பிகை பக்தர் அம்பிகையின் உறைவிடத்தை ஆறு இடங்களாகக் கூறுகின்ருர். சிவபெருமானது இடப்பாகம் வேதங்களின் ஆதியந்தம், சந்திரன், வெண்டாமரை, பாற்கடல் அடியார் உள்ளம் என்பன அந்த ஆறு இடங்களாம்.

கம்பர் சரஸ்வதியந்தாதி என நூறு பாடல்கள் பாடியுள்ளார் குமரகுருபரர் சரஸ்வதி தோத்திரம் என்னும் சிறந்த நூலைப் பாடியுள்ளார். அபிராமிப்பட்டர் அபிராமியந்தாதி என்னும் நூலைப் பாடியுள்ளார். இவையாவும் நவராத்திரி காலங்களில் தோத்திரப் பாக்களாக உபயோகிக்கத் தக்கன. நவராத்திரி காலத்தில் இல்லங்களில் அம்பிகையை வழிபடுவோர் தம் குறைகள் எல்லாம் நீங்கப் பெறுவர்.

“தனந்தருங் கல்வி தருமொரு
நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவும்
தருநெஞ்சில் வஞ்சமில்லா
வினந்தரு நல்லன வெல்லாந்
தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாளபி
ராமி கடைக்கண்களே”

## இந்துசமய ஆலோசனைச் சபை

### இந்துமாமன்றத்தலைவர் வெளியிடும்கருத்து

கலாசார மந்திரிக்கும் இந்து சமய ஆலோசனைச் சபைத் திட்டம் அமைப்புச் சபைக்கும் இடையிலுண்டான கருத்து வேற்றுமைபற்றி தனிப்பட்ட முறையில் எதையும் நான் வெளியிடவில்லை. குறித்த திட்ட அமைப்புச் சபை தெரிவித்த கருத்துக்களைத் தாம் ஏன் ஏற்கமுடியவில்லை என்பதற்கு மந்திரி காரணங் கூறியிருக்கின்ருர்.

திட்ட அமைப்புச் சபையும் தக்க பதிலைக் கொடுத்தது. அந்தளவில் திட்ட அமைப்புச் சபை கலைந்து விட்டதாகத் தெரிகிறது. எனினும் இத்தொடர்பில் மேலும் வேண்டியது செய்யாமல் இந்துக்களும் இந்துச் சபைகளும் அடங்கியிருக்கமுடியாது. இந்துமா மன்றத் தலைவர் என்ற முறையில் இந்தக் கருமத்தில் நான் ஈடுபடவேண்டியிருக்கின்றது.

எனவே, மந்திரியிடம் ஒரு தூதுக் குழு சென்று ஆலோசனைச் சபை நியமனம்பற்றிச் சரியான கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்று இந்துமா மன்ற நிருவாசபை எனக்கு அதிகாரம் தந்துள்ளது. ஐப்பசி (அக்டோபர்) முதல் வாரத்தில் மந்திரி எம்மை அழைக்கக் கூடும் என்று இந்துமா மன்றத் தலைவர் சேர். கந்தையா வைத்தியநாதன் ஓர்செய்தி வெளியிட்டிருக்கின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கண வரம்பு எழில்பெறக்காட்டிய அறிஞர்

## தமிழ்மக்களைத் தட்டி எழுப்பித் தமிழ் கற்கத் தூண்டிய தீரர்

### சிவசம்புப் புலவருக்கு ஞாபக சின்னம் அமைத்துநினைவுநாள்கொண்டாடுதல்கடன்

நம் தமிழகத்தில் தமிழ் வளர்த்த வள்ளல்களுக்கும் கவி புனைந்த புலவர்களுக்கும் இன்று ஞாபகதினம் நடத்தி வருகிறார்கள். புரட்சிக்கவியாத்த சுப்பிரமணிய பாரதியாருக்கு இந்தியாவில் மாத்திரமன்றி இலங்கையிலும் அவருடைய ஞாபகதினமும் இன்னும்பலருடைய ஞாபகவிழாக்களும் நடைபெறுகின்றன. பலர் கொண்டாடுகிறார்கள். நமது சிவசம்புப் புலவர் தினமும் இதுபோலக் கொண்டாடப்படுதல்வேண்டும். வடமராட்சியின் தமிழ் விளக்காய் விளங்கினார் புலவர் எனலாம். இப்புலவர் யாத்தகவிகளோ எண்ணிக்கையிலடங்கா. தமிழகத்தில் இலக்கண வரம்புக்கு எல்லை காட்டியாகவும் இவர் இருந்தார். தமிழகத்தைத் தட்டிஎழுப்பித் தமிழ் கற்கச் செய்த செந்தமிழ் வீரர் இவர்.

இத்தகைய புலவர்பெருந்தகை உடுப்பிட்டி என்னுமூரிலே பெரும் பிரபு திலகராய் வாழ்ந்த அருளம்பல முதலியாருக்குப் புதல்வராக அவதாரமானார். உரிய காலத்தில் வித்தியாரம்பஞ் செய்து நல்லூர் சரவணமுத்துப் புலவரிடத்தும் சம்பந்தப் புலவரிடத்தும் தொல்காப்பியமாதி இலக்கண நூல்களையும் — இராமாயணம் பாரதம் முதலிய இலக்கிய நூல்களையும் கற்றுணர்ந்தார். ஈழநாட்டில் பிரபந்தம் பாடிய புலவர்களுள் பல பிரபந்த நூல்களை இயற்றியவர் இவரே! இவர் இயற்கையாகவே கவிபாடும் ஆற்றல் படைத்தவர். பேசும் பொழுதும் இலக்கணவரம்பு கடவாது பேசுவார். இவர் ஒருமுறை இந்தியாவுக்குச் சென்று பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு இராமநாதபுரம் சென்றார். அங்கு பாஸ்கர சேதுபதி இருப்பதையறிந்து அவர்மேல் கல்லாடக்கலித்துறையுடன் நான்மணிமாலை, இரட்டைமணிமாலை முதலிய பிரபந்தங்களையும் பாடிப் பரிசில் பெற்றார். இப்புலவரின் வித்தகப் பெருமை எடுத்தோதத்தக்கதன்று.

பாண்டித்துரைத் தேவரிலும் ஒரு பிரபந்தம் பாடிப் பரிசில் பெற்றனர். இந்தியாவிலும் ஈழ நாட்டிலும் உள்ள தலங்கள் மீதும் பிரபந்தங்கள் பாடியுள்ளார். சிலநூல்களுக்குஉரையும் செய்துள்ளார். அவை மறைசையந்தாதி, யாப்பருங்கலகக் காரிகை, கந்தபுராணம் வள்ளியம்மை திருமணப் படலம் முதலியன.

இவரிடம் கற்றுத் தேர்ந்தோர் புலோலி ஆசிரியர் திரு. வ. சுப்பிரமணிய பிள்ளை, அவர் சகோதரர்களான மகாபண்டிதர் வ. கணபதிப்பிள்ளை, வ. குமாரசாமிப்புலவர், தவயோகினி திருமதி வ. பார்பதியம்மையார் முயலாயினோரும், வல்வை வயித்திலிங்கம்

— செ. கோ. —

பிள்ளை, அவ்வூர் அருணசலம்பிள்ளை, புலோலி தில்லைநாதநாவலர், தும்பளை முத்துக்குமாரசாமிக் குருக்கள், வேன்மயில்வாகனச் செட்டியார், ஆவரங்கால் நமசிவாயப் புலவர், கரணவாய் திருஞான சம்பந்த தேசிகர், நமசிவாயதேசிகர் ஆகியோரும் இன்னும் பலருமாவர்.

இப்புலவர் திலகர் பாடிய பிரபந்தங்கள் சிலவற்றைக் காலஞ்சென்ற கரணவாய் பண்டிதர் திரு. செவ்வந்திநாததேசிகர் அவர்கள் திரட்டிப் புலவர் நினைவாக வெளியிட்டுள்ளார்கள். அப்பெரியார் நீண்ட ஆயுளுக்கு இருந்திருப்பரேல் புலவர் யாத்த நூல்கள் எல்லாம் வெளிவந்து அவருடைய பெருமையும் இமயம் ஈறுகப் பரந்திருக்கும் என்பதிற் சந்தேகமில்லை எனலாம்.

புலவர் அவர்களுக்கு "புலவர்" எனப் பட்டம்சூட்டியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் அவர்களாவர். அதனல் புலவர் அவர்கள் நாவலர் அவர்களைத் தம் அபிமானக் குருவாகக்கொண்டொழுகி வந்தார். புலவர் நீண்ட ஆயுளுக்கு இருந்தவர்கள் அதனல் கண்பார்வை குன்றி இருந்த காலத்தில் கந்தவனப்பெருமான் மீது பிரபந்தம்பாடி மீண்டும் கண்பார்வை பெற்றாரெனவும் காலங்கண்ட முதியோர் கூறுவர்.

இத்தகைய புலவர்பெருந்தகையின் ஞாபக தினம் புரட்டாதி மாதத்தில் வருகின்றது. இதைத் தமிழ மக்கள் எல்லோரும் சங்கங்கள் சபைகள் பாடசாலைகள்மூலம் கொண்டாடி மகிழ்தல் வேண்டும். புலவர் தினத்தை வருடந்தோறும் கொண்டாடுவதுமல்லாமல் அவர் ஞாபகமாக வடமராட்சி மத்தியில் ஒரு நூல் நிலையம் அமைத்தும் அந்நிலையத்தில் அவர் இயற்றிய நூல்களை வைத்துப் பாதுகாத்தும் அந்நூல் [illegible]

# அருணந்தி சிவாசாரியர் குருபூசை

## நாவலர் மண்டபத்திற் சொற்பொழிவு

ஞாயிற்றுக்கிழமை 22-9-57 இரவு அருள்நந்தி சிவாசாரியர் குருபூசை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாதரவில் சபை நாவலர் மண்டபத்தில் நடத்தப்பட்டது. விசேட கடவுளாராதனை நிகழ்ந்தபின் சித்தாந்த பண்டிதர் திரு வே. சோமசுந்தரம் அவர்கள் அருள்நந்தி சிவாசாரியர் என்னும் பொருள்பற்றிப் பிரசங்கஞ் செய்தார்கள்.

அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள், சதாசிவமூர்த்தி நாயனரிடத்தில் தீக்ஷை பெற்ற பஞ்சப் பிரமகோத்திரத்திலுதித்தவர். அவர் சாமு சித்தர் வைநசிகர், பிராகிருதர் என்ற மூவகை ஆன்மாக்களுள் மார்க்கர் கண்ட நாலோதி வீடுகாதலித்திடுகின்றவர்களில் ஒருவரென்றும் அவர் முறைப்படி சமய விசேட நிருவாண தீக்ஷை ஆசாரியபிஷேகங்களைப் பெற்று வேதாகமக் கலைகள் பன்னிரு திருமுறைகளோதிப் பக்குவமுடையராயினர் என்றும் அதனலே அவருக்குச் சகலாகமபண்டிதர் என்ற காரணப் பெயர் அறிஞர்களாலே சூட்டப்பெற்றார் என்றும் அறிகின்றோம். அவர் சாத்திரவிற்பன்னரென்பதோடமையாமல் தாம் கற்ற கல்வி விசேடத்தினல் சைவத்துக்கு சோபான முறையாக பக்குவத்துக் கேற்றதாக இறைவனு லமைக்கப்பட்ட புறப் புறச் சமயம் புறச் சமயம் முதலாகிய சமயங்களின் உண்மைகளை எடுத்து மக்களுக்குக் கூறினர். அது முடிந்த முடிபல்ல, சோபான முறையாய் உள்ளதென்பதை உணர்த்தியும் குற்றமில்லாத சன்மார்க்க நெறியாகிய சரியை கிரியை யோகம் ஞானம் என்பவைகளை உலகத்துக்குப் பரப்பியும் பிராமணர் க்ஷத்திரியர், வைசிர், சூத்திரர் என்னும் நான்குவகுப்பினருக்குள் பக்குவமுடையார்க்கு சஞ்சிதம் மாயேயமாகிய வினைகளைத் தீர்ப்பதற் கேதுவாகிய கிரியா சக்தி விருத்தியாகிய சமயம் விசேடம் நிருவாணம் அபிஷேகம் முதலாகிய தீக்ஷைகளைப் புரிந்து வருகின்ற காலத்தில் தீவிரதா பக்குவமுடையவராய் நான்காம் சத்திபாதத்தைப் பெற்று அந்த அருட் சத்தியானது செலுத்த ஞான குருவாகிய மெய்கண்டதேவருடையசந்நிதானத்தையடைந்தார். அடைந்த அவதரத்தில் சூரியன் சந்நிதியிலே பிடித்த சூரிய காந்தமானது தன்னைச் சூழ்ந்திருந்த பஞ்சைச் சுட்ட தன்மை போல அவரது ஆன்ம போதத்தினல் மறைக்கப்பட்டிருந்த ஞான பானுவானது பிரகாசிக்க, உண்மையை யுணர்ந்து குருவாகிய மெய்கண்ட தேவரது பாதங்களில் விழுந்து நமஸ்காரம் செய்தார். குருமூர்த்தியானவர் சீடனது பக்குவத்தையுணர்ந்து அநாதியாகிய ஆணவத்தின் சக்திகளையும் பிராரத்துவம் அனுபவிக்கும் பொழுது நான் எனதென்னும் செருக்கால் வரும் ஆகாமிய வினைகளையும் கிரியா சக்தி விருத்தியினல் தீர்த்துஎஞ்சி நின்ற சஞ்சித கன்மங்களையும் ஒருங்கே தீர்க்கின்றதாகிய ஞானதீக்ஷையையும் கொடுத்து அது நிலைபெறுதற் கேதுவாகிய பரிச தீக்ஷையாகும் திருவடி தீக்ஷையையும்கொடுத்தார். அவர் அந்த ஞானத்தின் வழியாகச் சென்று நேயப் பொருளாகிய சிவத்தையடைந்து சீவன் முத்தரானர்.

சிவஞான போதத்தின் விருத்தியாகிய சிவஞான சித்தியாரையும்அதற்கு விளக்கமாகிய இருபாவிருபதனையும் செய்தருளி தனது நன் மாணக்கனகிய மறைஞான சம்பந்த சுவாமிகளுக்கு அத்துவித உபதேசஞ் செய்து அதன் பின்னர் சிவன் நானேனென்ற அத்துவிதமாகிய அபேத பாவனை புரிந்து அதனல் ஆன்ம போதம் அடங்கப் பெற்று அகண்டாகாரநித்த வியாபக சச்சிதானந்தப் பிளம்பாகிய சிவத்தோடு இரண்டறக் கலந்தார்" என்று அவர் தமது பிரசங்கத்திற் கூறினர்.

### அகில இலங்கைச் சைவ சமயபாடப்பரீட்சை

கொழும்புவிவேகானந்த சபையாரால் நடத்தப்பெறும் அகில இலங்கைச் சைவசமயபாடப் பரீட்சை இருபத்தேழாம் முறையாக இலங்கையின் 186 இடங்களில் ஞாயிற்றுக்கிழமை 22-9-57-ல் நடைபெற்றது 229 பாடசாலைகளிலிருந்து 13,899 மாணவர் மாணவிகள் குறித்த பரீட்சைக்குத் தோற்றினர். சென்ற ஆண்டு 211 பாடசாலைகளிலிருந்து 12,653 மாணவர் தோற்றினர்என்பது குறிப்பிடத்தக்கது.

திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலைஏனைய எல்லாப் பாடசாலைகளிலும் கூடின தொகை மாணவரைத் தோற்றச் செய்தது. கொழும்பு விவேகானந்த வித்தியாலயம் இரண்டாவதாய் வந்தது. இவை முறையே 352 மாணவரையும் 310 மாணவரையும் தோற்றச் செய்தன.

### மாகாணங்களிலும் இந்து ஆலோசனைச்சபைகள்

கொழும்பில் நிறுவப்படும் இந்துசமய ஆலோசனைச் சபைக்கு ஆலோசனை கூறும் வண்ணம் மாகாணங்களில் இந்து சமய ஆலோசனைச் சபைகள் அமைக்கப்படுமென்று கலாசார மந்திரி கூறுகின்றார்.

### யாழ்ப்பாண நகர வரியிறுப்போர் சங்கம்

யாழ்ப்பாண நகரசபைப் பதவிகளிற் பங்குபற்றும் நோக்கமின்றி, நகரசபை அலுவல்கள் நன்கு நடைபெறச்செய்தற்கு வேண்டிய சரிபிழைகளை எடுத்துக் காட்டியும் தகுதி வாய்ந்தோரையே நகரசபை அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யும்படி நல்லுரை கூறி உதவும் பொருட்டும் யாழ்ப்பாணத்தில் வரியிறுப்போர் சங்கம் ஒன்று அமைக்கப் பெற்றுள்ளது. வைத்திய கலாநிதி வி. ரி. பசுபதி, திருவாளர்கள் ரி. முத்துக்குமாரு, எஸ். கதிரவேலு ஆகியோர் இச்சங்கத்தின் உயிர்நாடியாக இயங்கத் தொடங்கியிருக்கின்றனர்.

### அம்மை வழிபாட்டுக்கு அரிய காலம்

3-ம் பக்கத் தொடர்ச்சி

வும் சக்தியை மக்கள் வழிபடுகின்றனர். மூன்று திறமான சக்திகளை வழிபட்ட போதிலும் எல்லாம் உண்மையில் ஒன்றேயாம்.

நவராத்திரி காலத்தில் அருந் தவஞ் செய்யுங்கள். அம்மைவழிபாட்டுக்கு இதுவே சிறந்த காலமாகும். எல்லா நலன்களையும் அம்மை உங்களுக்கு ஈந்தருளுவாள்.

### மேற்குப் பாக்கிஸ்தான் எதிர்கால அரசியல்

இப்பொழுது ஒரே மாகாணமாயுள்ள மேற்குப் பாக்கிஸ்தான் நாலு அல்லது ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு பின்பு இணைக்கப்பட்டு ஆட்சி நடத்தப்படுதல் வேண்டும் என்னும் பிரேரணை ஒன்று மேற்குப் பாக்கிஸ்தான் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

### வைத்திய விஞ்ஞான கூடங்கள்

இரத்தம், மலசலம் ஆதியவை சோதிப்பதற்குக் கொழும்புக்கு அனுப்பி அவற்றின் முடிவுகளைப் பெறுவதில் அதிக காலதாமசம் உண்டாகின்றது. இக்குறையை நீக்கும் பொருட்டு மாகாணங்களின் தலைப்பட்டினங்களில்வைத்திய விஞ்ஞான ஆய்வுக் கூடங்கள் அமைக்க வைத்தியப்பகுதி தீர்மானித்துள்ளதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல, M, B. 1358

1 கபிப் மொகமெட் மொகமேட் சம்செடீன் வண்ணார் பண்ணை கிழக்கு யாழ்ப்பாணம் வழக்காளி

1 நல்லான் சாணெயனும் பெண்சாதி சோதி இருவரும் மயிலிட்டி எதிராளிகள்

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் M. B. 1357-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் 3 துண்டுக் காணி 1957 ௵ மார்கழி ௴ (7-12-57) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

மேற்சொல்லிய எதிராளி வழக்காளிக்கு ரூபா 1891 இன்னும் ரூபா 1500 க்கு 22-11-56 தொடக்கம் 28-3-57 வரையும் 10 வீத வட்டியும் அதன்பின் கூடிய முழுத் தொகைக்கு 28 3—57 தொடக்கம் 5 வீத வட்டியும் இறுக்கும் வரையும் கொடுக்க வேண்டும். கோட்டுச் செலவு ரூபா 205—85, அதாவது கோட்டுச் செலவு ரூபா 140—05 செலவு ரூபா 35-65 செலவு ரூபா 30—15.

ஆதன விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் மயிலிட்டிக் கோவிற்பற்று மயிலிட்டி வலிகாமம் வடக்கு யாழ்ப்பாணம் இறை "தாளச்சான தோட்டம்" என்னும் காணி நிலப்பரப்பு 11 குழி $10\frac{1}{4}$ இதில் நாலில் ஒரு பங்கும் செய்பயிர் வான் பயிர்களும். எல்லை கிழக்கு பழைய ரேட்டு, வடக்கு தம்பிப்பிள்ளை பெண் தங்கச்சிப்பிள்ளை, மேற்கு மூததான தவசியும் மறுபேரும், தெற்கு வயிரவன் கைம்பெண் மூததி. ஆதனப் பதிவு இலக்கம் H 212/252.

2, பிறிக்கப்படாத "வல்லூத திசிமா" என்னும் காணி நிலப்பரப்பு 6 குழி $4\frac{1}{2}$ முலவை, மயிலிட்டி கோவிலபற்று மேற்சொல்லியபடி எல்லை கிழக்கு சின்னன் கைம்பெண் காததயன் வடக்கு நல்லான சயினியனும் மறுபேரும், மேற்கு லல்லி சின்னன கைம்பெண் காததியன் தெற்கு சின்னன் இறங்கன் இதில நாலில் ஒரு பங்கு விற்கப்படும். ஆதன பதிவு இலக்கம H 212/25.

3, பிரிக்கப்படாத காணி 'மதிரை" நிலப்பரப்பு 13 செய்பயிர் வான்பயிர் மயிலிட்டி கோவில்பற்று. எல்லை கிழக்கு கணவதி கதிரனின் ஆதனம. வடக்கு இளையதம்பி பொன்னையாவின ஆதனம், மேற்கு ஒழுங்கை, தெற்கு நல்லான சயினியனும் மறுபேரும் இதில் எட்டில் ஒரு பங்கு விற்கப்படும் ($\frac{1}{8}$) ஆதனப பதிவு இலக்கம் H 212/250.

R. Kanagaratnam
Commissioner

R. Kanagaratnam
No 35 Chundikuly
Jaffna
M 117 27-9-57

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. MB/1465

1. வீரகத்திப்பிள்ளை ராசசேகரம் பெரியகடை யாழ்ப்பாணம் —வழக்காளி.

1. பொன்னம்பலம் கணபதிப்பிள்ளை சங்கானை கிழக்கு —எதிராளி.

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் MB/1465 ப் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1957 ௵ மார்கழி ௴ 5உ (5-12-57) பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

மேற்சொல்லிய எதிராளி வழக்காளிக்கு ரூபா (927/50) ரூபாய் 750 துக்கு 30-1-57 தொடக்கம் 15-5-57 வரையும் 12 வீத வட்டியும் அதன்பின் கூடிய முழுத் தொகைக்கு 15-5-57 தொடக்கம் 5 வீத வட்டி இறுக்கும்வரையும் கொடுக்கவேண்டும், கோட்டுச் செலவும் ரூபா 171/-

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சங்கானை கிழக்கு கோவில்பற்று சங்கானை வலிகாமம் மேற்கு இறை சங்கடைவாசல் என்னும் காணி நிலப்பரப்பு இரண்டு, குளி 13. இதில் பனைமரமும், கல்வீடும். கிழக்குப் பக்கத்தில் இருக்கும் கிணற்றில் $\frac{1}{2}$ வாசியும் தண்ணீர்ப்பங்கும் வழி வாய்க்காலும். எல்லை கிழக்கு பொன்னம்பலம் கணபதிப்பிள்ளையின் ஆதனம் (எதிராளி) வடக்கு ஒழுங்கை, மேற்கு கணபதிப்பிள்ளை பொன்னுவின் ஆதனம், தெற்கு முருகேசு ஆறுமுகமும் பங்காளரின் ஆதனம். இவ்வளவும் யாழ்ப்பாணம் காணி பதிவு கந்தோரில் பதியப்பட்ட இலக்கம் E 183/289 E 309/99.

R. Kanagaratnam
Commissioner

R. Kanagaratnam
No 35 chundikuli
Jaffna
M. 118 27-9-57

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—O—

1. நாரந்தனை
N, சிவஞானமும் பெண்
2. ஷை செல்லம்மாவும்
—வழக்காளிகள்,

இல, MB 1527

எதிராக

1, சரவணை நாகலிங்கம் கந்தசாமியும் பெண்
2. ஷை பாலாம்பிகையும்
3. கரம்பன் C.A. துரைராசாவும் பெண்
4. ஷை திரேசா இராசம்மாவும்

2 ம் எதிரி காலஞ்சென்ற கதிரேசு மயில்வாகனத்தின் 1431 ம் இலக்க வழக்கில் மரணசாதனத் தத்துவகாரி

—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் MB 1527 ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் 3 துண்டுக் காணிகளை 1957 ௵ ஐப்பசி ௴ 25உ வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 4000 ம் இதில் ரூபா 2000 /- க்கு 4-3-57 திகதி தொடக்கம் 25-6-57 வரைக்கும் வருட மொன்றுக்கு 100-க்கு 15 வீத வட்டியும், அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 336-76.

காணி விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி வேலணைக் கோவிற்பற்று வேலணை மேற்கிறை அரன் கணக்கை அரண் கணக்கைவாகைடி வயலும் அரன்கணக்கையும் வயலும் நெற்பரப்பு 30 குளி 7-ம் எல்லை கிழக்கு நாகலிங்கம் சரவணமுத்துவும் சுப்பிரமணியம் பெண் இராசம்மாவும், வடக்கு முருகேசு சின்னையாவும் முருகேசு சின்னத்துரையும், மேற்கு நல்லூர்க் கந்தசாமி கோவிலாதனம், தெற்கு நல்லூர்க்கந்தசாமிகோவிலாதனமும் நாகலிங்கம் சரவணமுத்துவும். இதடங்கலிற் சொரியலாய் அரைவாசி.

2, ஷை வேலணை மேற்கில் சரவணை இறை பெரிய சக்களாவும் வெற்றிய சக்களாவும் நெற்பரப்பு 19 குளி $7\frac{1}{2}$-ம் பனைகளும். எல்லை கிழக்கு வயிரமுத்து பெண் சேதுவும் செல்லர் மகள் சின்னப்பிள்ளையும் சதாசிவம் பெண் பொன்னுவும் வடக்கு சதாசிவம் பெண் பொன்னுவும் சின்னத்தம்பி கைம்பெண் தங்கமும் மேற்கு சகிரேசு துரையப்பாவும் மறுபேரும் தெற்கு பழைய ரேட்டு. இதடங்கலிற் சொரியலாய் அரைவாசி.

3. ஷை சரவணை இறை குருக்கலடு. நிலப் பரப்பு 16 எல்லை கிழக்கு தம்பையா பெண் முத்தாச்சி வடக்கு அருணசலம் பெண் சிதம்பரமும் வேலுப்பிள்ளை செல்லையாவும் மேற்கு ரேட்டு. தெற்கு சின்னத்தம்பி கந்தையாவும் முத்தர் தம்பையாவும் இதடங்கலிற் சொரியலாய் அரைவாசி.

ஆ ச. கந்தையா
கொம்மிஷனர்

காரைநகர்
6-9-57.
M 115. 27-9-

# சிவஞானபோதம் ஓர் தேன் வதை

1-ம்பக்கத் தொடர்ச்சி

ளில் தோற்றி, பி. ஏ முதலிய பரீட்சைகளில் சித்தியடைந்தனர் இவர் தமது 60 வது வயதில் இளைப்பாறும் வரை மானிப்பாய் இந்துக்கல்லூரியிலே திறம்படக் கடமையாற்றினர். ஷை கல்லூரியைச் சேர்ந்த சமயவிஷயங்களில் இவர் முக்கியபாகப் பங்குபற்றி உதவி புரிந்தனர்.

இவர் ஆசிரியருடைய கடமைகளுடன் தமது பொதுத் தொண்டுகளைக் கட்டுப்படுத்தவில்லை. அரசியல்,சமூகத்தொண்டு,கல்வி, சமயத் தொண்டு முதலியவற்றிலும்பங்குபற்றினர் இவர் ஆற்றிய கடமைகளுக்குள் சமயத்தொண்டே பிரதானமானதாகும். சிறு வயது தொடக்கம் சைவ சமயத்தை முறையாகக்கற்று அதன்படி யொழுக வேண்டுமெனவும் சைவசயமத்துக்கு நேரும் ஆபத்துக்களைக் களைந்து அதனைப் பாதுகாக்க வேண்டுமென்வும் சைவசமய உண்மைகளைப் பலரறியச் செய்யவேண்டுமெனவும் விருப்பங்கொண்டவர், சேர் பொன்னப்பலம் இராமநாதன் ஸ்ரீமான் த கைலாயபிள்ளை, ஸ்ரீமான் சு. சிவபாதசுந்தரம் பிள்ளை B. A. ஸ்ரீமான் அ விசுவநாதன் B.A. ஆகியவர்களிடத்தில் சைவ சித்தாந்தக் கல்வியைப் பயின்றவர். சைவ சமயிகளுள் ஒரு சாராருக்கு இவருடைய சமயக் கொள்கைகளும் கருத்துக்களும் பிடிப்பாக விருந்தன. இன்னொரு சாராருக்கு இவருடைய சமயக் கொள்கைகளும் கருத்துக்களும் மிக வெறுப்பாக இருந்தன. அவ் விதமான நிலைமைக்குக் காரணம் திரு. நாகையா அவர்களின் பழைமையான வைதீக சைவப்பற்றேயாகும். "உலகத்துக்குக் கருத்தா சிவபெருமான். சிவபெருமான் ஆன்மாக்கள் ஈடேறும் பொருட்டு அருளிய முதல் நூல்கள் வேதசிவாகமங்கள் என்னும் இரண்டுமாம்" என ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் தமது முதலாம் சைவவினவிடையில் கூறியதை முற்றும் நம்பினவர். ஆகையினல் இவர் இந்த உண்மையை உரைகல்லாக வைத்துக் கொண்டு ஈழநாட்டிலுள்ள சைவர்களையும் இந்தியாவிலிருந்து வருகின்றவர்களையும் மதிப்பிட்டு தம்முடன் ஒத்து வருகின்றவர்களுடன் ஒத்துழைத்தும், முரண்பட்டவர்களுடன் மாறுபட்டும் வாழ்ந்து வந்தனர். தாம் பிழையெனக் கண்டதை எந்த இடத்திலும் எவரிடத்திலும் அஞ்சாது கூறி வந்தமையினல் "யதார்த்தவாதி வெகுசன விரோதி" என்ற முதுமொழிக்கிணங்கப் பலருடைய பகைக்குச் சில வேளைகளில் ஆளாயினர்.

(வரும்)

## சைவப் பெரியார் திரு. சி. நாகையா அவர்கள் மறைவு

சைவப்பெரியார் திரு. சி. நாகையா B. A. அவர்கள் சிறிது காலம் நோய்வாய்ப் பட்டிருந்து சென்ற சனிக்கிழமை இரவு 8-30 மணியளவில் வண்ணர்பண்ணையில் 'காமானியார் வளவு' என்னும் தமது இல்லத்தில் மனைவி மக்கள் வருந்திநிற்ப இவ்வுலக வாழ்வை நீத்தார் என்னும் துக்க செய்தியை அறிந்து வருந்துகிறேம். அடுத்த நாளாகிய ஞாயிற்றுக்கிழமை அவருடைய ஈமக்கிரியைகள் கோம்பையன்மணல் மயானத்தில் பல சுற்றமித்திரர் சமூகத்தில் சைவமுறைப்படி செல்லப்பெற்றன. திரு. நாகையா அவர்கள் அரசாங்கசேவையில் அமர்ந்து அதை நீத்து ஆசிரியராகக் கடமையாற்றிப் பல சமயத் தொண்டுகளில் ஈடுபட்டு வேதசிவாகமங்களைப் பேரபிமானத்துடன் போற்றி வாழ்ந்து சைவசமய நூல்களை முறைப்படி கற்ற ஒருவர். வேதாகம சைவ சித்தாந்தசபை என்னும் சபையில் அருந்தொண்டாற்றியதோடு யாழ்ப்பாணம் இந்து மகாசபை, யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை ஆகிய சபைத் தொண்டுகளிலும் பெரும் பங்குபற்றிவந்தார். 'குமரன்' என்ற புனை நாமத்தின் கீழ் இவர் எழுதிய கட்டுரைகள் இந்துசாதனத்தில் வெளிவந்திருக்கின்றன. இவருடைய பிரிவால் வருந்தும் மனைவி மக்களுக்கு எங்கள் அனுதாபம் உரியதாகின்றது. சைவத் தொண்டிற் சிந்தையைச் செலுத்திய இப்பெரியார் இறைவன் திருவருளால் ஆன்ம சாந்தி அடைவாராக.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

1. காரைதீவு மேற்கு குமாரவேலு இராசரெத்தினம்
2. ஷையூர் பெண் பொன்னம்மா · வழக்காளிகள்.

எதிராக

இல. MB/1467

1. காரைதீவு மேற்கு சண்முகம் வேலுப்பிள்ளை தனக்காகவும் தனது காலஞ்சென்ற மனைவி சின்னக்குட்டியின் ஆதனங்களின் பராபரிப்புக்காரியாகவும்.

2, ஷையூர் S. இராமு சங்கரப்பிள்ளை,

எதிராளிகள்.

யாழப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் MB/1467—ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1957ம் ௵ ஐப்பசி ௴ 19 ம் திகதி சனிக்கிழமை முற்பகல் முறையே முதலாம் காணி 9 மணி தொடக்கமும் இரண்டாம் காணி 10 மணி தொடக்கமுமாய் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா: 1096/- ம் ரூபா: 1078 - க்கு 30-1-57 தொடக்கம் 26-6-57 வரைக்கும் நாலு வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 301-85 சதம்.

காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவுக் கோவிற்பற்று தங்கோடையிறை "பந்தன் சீமா வளவு" பர, நீ. இல ஒன்றே கால் ($1\frac{1}{4}$) பனைகள் வடலிகள் தென்னைகளும் மற்றும் வான் பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு வயித்திலிங்கம் பெண் சரஸ்வதிக்குரிய வாதனம். வடக்கு கந்தர் கைம்பெண் தங்கமுத்துவிற்குரியவாதனம், மேற்கு ஒழுங்கை தெற்கு முருகேசு கதிரவேலுவிற்கும் பங்காளருக்குமுரியவாதனம்.

2. ஷை தங்கோடையிறை "தில்லை மோடை" பர நி. இல. ஐந்து (5) பனைகள் வடலிகளும் வேம்பும் எல்லை கிழக்கு அருணசலம் மயில்வானதிற்குரியவாதனம் வடக்கு ஒழுங்கை. மேற்கு சின்னப்பொடி தம்பிமுத்துவிற்கும் பங்காளிக்கும், சிதம்பரப்பிள்ளை கைம்பெண் சுந்தரம்மாவிற்குமுரியவாதனங்கள். தெற்கு சின்னக்குட்டி கணபதிப்பிள்ளையின் உரிமைக்காரர்கட்குரியவாதனம்.

1957-ம் ௵ புரட்டாதி ௴ 11உ

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்
காரைநகர்.
M 119 27-9-

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வண்ணர்பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம்
சோமசுந்ரம் குமாரசுவாமி
—வழக்காளி.

வழக்கு இல. MB/1403.

எதிராக

1. பேராதனை, கிருஷிக இலாகா S. காராளசிங்கம்
2, சப்பல் வீதி, யாழ்ப்பாணம் T. முத்துக்குமாரு
3, ஷை. தங்கரத்தினம் முத்துக்குமாருவின் மனைவி
4. யாழ்ப்பாணம், தின்னவேலி S முத்தையா
5. ஷை தையல்முத்து முத்தையாவின் மனைவி
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் MB/1403-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1957 ம்வருஷம் கார்த்திகைமாதம் 2 ந் திகதி சனிக்கிழமை (2 11.57 காலை 10-30மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்

தீர்வைத் தொகை:- ரூபா 740/—ம், 21-12-56 தொடக்கம் 15-5-57வரைக்கும் ரூபா500/-க்கு 12 வீத வட்டியும், அதன்பின் முழுத் தீர்வைத் தொகைக்கும் பணம் மூற்ருக இறுபடும்வரைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 156 - 10 சதமும்.

காணியின் விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக், வலிகாமம் வடக்குப் பகுதி, தெல்லிப்பளை கோயிற்பற்று, மாவிட்டபுரம் இறை 'பதிராய் கலட்டி "(Pathirai Kaladdy). நிலப்பரப்பு 33 - ம் குளி 3-ம். இதடங்கலிலும் மேற்குப்பக்கத்தால் பிரிக்கப்பட்டுள்ள நிலப்பரப்பு 18-ம் குளி3-ம் அதன் உடமைகளும். இதில் சொல்லப்பட்ட 18 பரப்பு 3 குளிக்கும் எல்லை கிழக்கு இராமக்கிருஷ்ணமிஷனுக்கும் மற்றையோருக்குமுரிய ஆதனம், வடக்கு ரேட்டு மேற்கு N, வைத்திலிங்கத்தினுடைய காணி, தெற்கு சுப்பிரமணியம் கைம்பெண் சின்னச்சிப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம்.

செ. பாண்டித்துரை
கொம்மிஷனர்.

மல்லாகம்,
19-9-57.
M. 113 27-9-57.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நலன்களெல்லாந் தரும் நவராத்திரி

1-ம் பக்கத் தொடர்ச்சி

நாளாக விளங்குகின்றது. மகிடாசுரன் என்னும் அசுரன் தேவர்களை வருத்தி வந்தான். வருத்தம் தாங்க மாட்டாத தேவர்கள் அம்மையாருக்கு முறையிட்டனர். அம்மையார் அசுரனைக்கொன்று தேவர்களின் துன்பத்தை நீக்கியருளினர் என்பது இத்தொடர்பிலுள்ளகதைகளுள்ஒன்று எங்கள் துன்பங்களுக்கு ஏதுவாயுள்ள அஞ்ஞானத்தை நீக்கி ஞான ஒளியை நல்கிப் பேரானந்தப் பெருவாழ்வை அம்மையார் அருளுவார் என்பது இக்கதையால் அறியவரும் உண்மையாகும்.

## கலைஞர்களுக்கு அரசாங்க உதவி

இலக்கியம், இசை, நடனம் ஆகிய துறைகளில் உழைக்கும்கலைஞர்களுக்கு ஊக்கம் அளிக்க உதவும் பொருட்டு இருகுழுஉக்களை அரசாங்கம் நியமித்துள்ளது. குறித்த கலைஞர்கள் வெளியிடும் நூல்களைக் குறித்த குழுஉக்கள் ஆராய்ந்து அந்நூலகளில் ஓர்பகுதியை விலைக்கு வாங்க அரசாங்கத்துககு ஆலோசனை கூறும் பிறவாறும் அவர்களுக்கு உதவிசெய்ய அரசாங்கம் கருதியுள்ளதாம்.

ஆகவே, குறித்த புண்ணிய காலத்தில் மேலே குறிப்பிட்டவாறு அம்மையாரை வழிபட்டு இம்மை மறுமை இன்பங்களை எய்துவோமாக.

## பழைய பாக்கிஸ்தான் மந்திரியின் கருத்து

ஓர் ஆண்டுக்குமுன் பாக்கிஸ்தான் வெளிநாட்டுத் துறை அமைச்சராகக் கடமையாற்றியவரும் பாக்கிஸ்தான் உழவர் கட்சித் தலைவருமான ஸ்ரீ ஹமிதுல் ஹக் சௌத்ரி சிட்டகொங்கில் நடந்த கட்சி மகாநாட்டிற் பேசும்போது பெரும் பிற்போக்குவாதிகளே இப்பொழுது பாக்கிஸ்தான் அரசாங்கத்தில் பதவி வகித்து வருகின்றனர் என்று பாக்கிஸ்தான் அரசாங்கத்தைப்பற்றிய தமது மனக்கசப்பைத் தெரிவித்தார்.

## நயினுதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் 1-8-56 தொடக்கம் 31-7-57 வரை

## ஆதாய நட்டக் கணக்கு

| செலவு | ரூ. ச. | வரவு | ரூ. ச. |
|---|---|---|---|
| பிரயாணச்செலவு | 93-38 | தென்னமரக்குத்தகை | 228-50 |
| மடம் பழுதுபார்த்தல் | 252-54 | திருப்பணிக்கு | 175-91 |
| ஓடிற்றும் அதன் வேறு செலவும் | 290-50 | உண்டியல் வரவு | 1473-17 |
| | | கர்ணபூஷணம் | 61-00 |
| கந்தசஷ்டி செலவு | 61-99 | சபாபதிப்பிள்ளை சிமந்து | 1000-00 |
| பூந்தோட்டச் செலவு | 325-00 | வேப்பமரம் விற்றது | 1018-00 |
| நவராத்திரி ,, | 386-47 | அன்னப்பிராசனம் | 136-00 |
| திருவெம்பாவை ,, | 106-76 | மாதாந்த அர்ச்சனை | 554-15 |
| தைப்பூசச் ,, | 1-02 | தண்ணீர் வார்ப்பு | 49-05 |
| காகிதாதிகள், முத்திரை, அச்சுக்கூலி | 418-16 | கல்லு விற்றவகை | 320-00 |
| தேர்முட்டி இடத்தல் | 122-00 | சகஸ்திரநாமம் | 1248-00 |
| தற்காலிகத் தேர்க்கொட்டகை | 501-23 | அபிஷேகம் | 1795-00 |
| | | மீசுவரி நெல் | 1780-00 |
| தென்னம்பிள்ளை நட்டது | 14-20 | சங்காபிஷேகம் | 15-13 |
| பசுமாட்டுச்செலவு | 42-25 | திருவிழா வரவு | 23728-92 |
| அபிஷேகச்செலவு | 978-01 | அடிமைச்சாதனம் | 76-00 |
| நித்திய பூசைச்செலவு | 2840-01 | சௌளக்காணிக்கை | 515-00 |
| சம்பளச் செலவு | 9914-00 | பூசைக்காணிக்கை | 5720-50 |
| பொதுச் செலவு | 536-04 | காணிக்கை | 8121-80 |
| பூசைச் செலவு | 2843-88 | மூலஸ்தானசாத்து | 1109-00 |
| திருவிழாச்செலவு | 7589-41 | மகாசபை அங்கததவர் | 340-00 |
| வருட வருமானம் | 22190-47 | பழைய சாமான் விற்ற | 42-19 |
| | 49507-32 | | 49507-32 |

## நயினுதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன்கோவில் 31-7-57 ல் உள்ள ஐந்தொகை

| செல்மதி | ரூ. ச. | இருப்பு | ரூ. ச. |
|---|---|---|---|
| கோவில் வரவு | 54768-08 | விக்கிரக மூர்த்திகள் | 122-75 |
| மு. வை. புவனேஸ்வரி அம்மா | 500-00 | வெள்ளி | 4418-85 |
| வே, சு. அச்சகம் | 90-75 | மு. சி. துரைசாமி | 237-00 |
| மகேசு யாழ்ப்பாணம் | 209-32 | திருவாபரணம் | 7722-50 |
| இவ்வருட வருமானம் | 22190-47 | பசுமாடு | 30-70 |
| | | வாகனம் | 87 2-10 |
| | | வே. விசுவலிங்கம் | 147-00 |
| | | சு. நா, கந்தையா | 70-00 |
| | | காணி | 4225-00 |
| | | நெல் | 1536-60 |
| | | பலபுள்ளி | 167-77 |
| | | கொட்டகை | 7059-01 |
| | | நா. சோமு ஆசாரி | 10-00 |
| | | கு இராசதுரை | 40-00 |
| | | P. K. அஸ்தகிரிஐயர் | 100-00 |
| | | து. துரைச்சாரி | 10-00 |
| | | D. R. O. சிமந்துவகை | 179-00 |
| | | தளபாடம் | 15250-03 |
| | | சாக்கு | 12-00 |
| | | பவுண் | 1129-40 |
| | | லைற்மெசின் | 2900-00 |
| | | ச நடராசாக்குருக்சள் | 200-00 |
| | | தேர்த்திருப்பணிச்சபை | 1703-64 |
| | | தேர் மண்டபம் | 16126-59 |
| | | கச்சேரி | 525-38 |
| | | மேக்கன்ரைல் வங்கி | 215-00 |
| | | ரொக்க இருப்பு | 4858-30 |
| | 77758-62 | | 77758-62 |

சு. பொ. கந்தையா,
பகிரங்கக் கணக்குப் பரிசோதகர்.

க. சோமசுந்தரம்,
தனாதிகாரி.

நயினுதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன்கோவில்
பரிபாலன சபையார்.

M. 114 27-9-57.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சுரம்பன் வேல்முருகர் சிவலிங்கம்பிள்ளை
வழக்காளி

இல M. B, 230

எதிராக

கரம்பன் இப்போ சுருவில் கந்தையா செல்லத்துரை

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டின் M. B. 230-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஈட்டுறுதி உரித்தை 1957-ம் ஹு ஐப்பசி மீ 25 உ வெள்ளிகிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் பின்னுல்சொல்லப்படும் 1-ம் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 640-ம் இதில் ரூபா 500 ககு 12-5-55 திகதி தொடக்கம் 30-4-56 வரைக்கும் வருடமொன்றுக்கு 100-க்கு 12 வித வட்டியும் அதன் மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் 5 வித வட்டியும் கோட்டுச் செலவும்,

ஈட்டுரித்து

1952-ம் ஆண்டு சித்திரை மீ 3-ந் திகதி நொத்தாரிசு பொ. இராமலிங்கம் முகதாவில் 7361 ம் இலக்கத்தில் ரூபா 3500க்கும் வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12 வித வட்டிக்கும் ஈடாகக் கொடுதத ஈட்டுறுதியில் சொல்லிய நயம் உரித்து சோந்தை முழுவதிலும் அரைவாசிப் பங்கை பின்னுல் சொல்லப்படும் காணிகளில் அறவிடப்படும்.

காணி விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி வேலணைக் கோவிற்பற்று வேலணை மேற்கிறை பீலிகொண்டல் நெற்பரப்பு 15 குளி 3 3,4 எல்லை கிழக்கு ஏகாம்பரம் பெண் இராசம்மா வடக்கு K. சுப்பிரமணியமும் மறு மேற்கு பொன்னம்பலம் பெண் மரகதமும் மறுபேரும் தெற்கு பொன்னையா பெண் மனோன்மணியும் மறு பேரும் இதடங்கலும்.


2 ஷ்டி வேலணை மேற்கிறை ஆலம்புலம் நெற்பரப்பு 4 எல்லை கிழக்கும்தெற்கும் சிற்பனை முருகமூர்த்திகோயி லாதனம், வடக்கு ஒழுங்கை மேற்கு இளையதம்பி சொக்கலிங்கமும் மறுபேரும் இதடங்கலும்.

3 மேற்படி வேலணை மேற்கிறை தென்னின்கன்கலடு நெற்பர 9 1/2ம் கிணறும் எல்லை கிழக்கு இராமநாதர் மருதையினர் வடக்கு முடிக்குரிய நிலம் மேற்கு ஏரம்பு நடேசபிள்ளை தெற்கு ரேட்டு இதடங்கலும். ஆனுல் சொல்லப்பட்ட கிணற்றில் நடேசபிள்ளையின் மேற்கெல்லைக் காணிக்குரிய தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்காலும் சொல்லப்பட்ட கிணற்றில் இருந்து இக்காணியின் வடக்கெல்லையால் போகும் வழிஉரித்தும் பிறநீங்கல்,

ஆ. ச. கந்தையா,
கொமிஷனர்

6-9-57.

M 116 27-9-




## ஈச்சுர நிச்சயம்

யாழ்ப்பாணத்துக் கொக்குவில்,
குகதாசர்
ச. சபாரத்தினமுதலியார் அவர்கள்
எழுதியது

திருமயிலை
சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை பதிப்பு.

விலை ரூபா: 3-50.

கிடைக்குமிடம்:
மனேஜர், "இந்துசாதனம்"
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

M. 102, 6, 13, 20-9-57.

## யாழ்ப்பாணம் ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கோடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சரிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

Std 14

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவ வேள்வி மல்க
மேன்மைகொள சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு, சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 27-9-57 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org